திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, உணவு தானிய மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் மொத்த வியாபாரத்தை முழுவதையுமே அரசு ஏற்க வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய், சிமென்ட், சர்க்கரை போன்ற மற்ற அத்தியாவசியப் பண்டங்களின் கொள்முதல் விநியோகப் பொறுப்பையும் இப்பொழுது இல்லாவிட்டாலும் படிப்படியாகவாவது அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த இணையத்தினுடைய தற்போதைய பணிகளுடன், இடைத் தரகர்களை அறவே நீக்கிவிட்டு உற்பத்தி செய்கின்ற உழவர்களிடமிருந்து பொருள்களைக் கொள்முதல் செய்து உபயோகிக்கின்ற நுகர்வோர்களுக்கு நேரடியாகத் தர வேண்டுமென்ற திட்டத்தைத்தான் தற்பொழுது நடைமுறைப் படுத்த அரசு உள்ளது. புதிய கூட்டுறவுச் சட்டம் வந்தவுடன் இடைத்தரகர்கள் என்ற பிரச்னை இல்லாத அளவிற்கு நுகர்வோர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் இடையே அவர்கள் இல்லாமை ஏற்பட வழிவகை செய்யப்படும்.

சேலம் புறநகர்களுக்கு இ. எஸ். ஐ. திட்டத்தை விரிவுபடுத்துதல்

*வினா எண். 785—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் புறநகர்களுக்கு E.S.I. திட்டத்தை நீட்டிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது செயல்படும்?

(ஈ) எத்தனை பேர்கள் பயன் அடைவார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சேலம் புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட்டத்தை நீட்டித்து, அப்பகுதியில் வாழும் தொழிலாளர்களும், அவர் தம் குடும்பத்தினரும் மருத்துவச் சிகிச்சை பெற, புறநகர் மையப் பகுதியில் ஒரு மருத்துவர் கொண்ட இ.எஸ்.ஐ. மருந்தகத்தை அமைத்து செயல்பட 12-10-81-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) மருத்துவம் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர், மருந்தகம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார். இது முடிந்ததும், இவ்வரசு மைய அரசுக்கு திட்டம் செயல்படும் தேதியை நிர்ணயித்து திட்டம் செயல்படுத்துவதற்குரிய அறிக்கையை வெளியிடக் கோரும். இவ்வறிக்கை வெளியானதும் திட்டம் செயல்படும்.

(ஈ) சுமார் 1000 தொழிலாளர்கள் பயன் அடைவார்கள்,